அரசியல் சிந்தனை
நூல்வரிசை

28

# தொடர் கதையாகும் ஆக்கிரமிப்புக்கள்

ஆர். ராம்

வெளியீடு
சமூக விஞ்ஞான
ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வுமையம் மாதம் தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல்வரிசையில் 28வது நூலாக ஆர்.ராம் எழுதிய "தொடர்கதையாகும் ஆக்கிரமிப்புக்கள்" எனும் இச் சிறு நூல் வெளிவருகின்றது.

இனப்பிரச்சினை என்பதே தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவது தான் அதாவது தேசத்தைத் தாங்குகின்ற தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பன அழிக்கப்படுகின்றமை தான். இதில் நிலப் பறிப்பு மிகவும் முக்கியமானது. நிலப்பறிப்பு இடம்பெற்றால் ஏனைய தூண்கள் தாங்களாகவே சரிந்து விழுந்துவிடும்.

தமிழர் தாயகத்தில் நிலப்பறிப்புக்கு நீண்ட வரலாறு இருக்கின்றது. மட்டக்களப்பின் தென்பகுதியில் உருவாக்கப்பட்ட கல்லோயாத் திட்டத்திலிருந்து தொடங்கி திருகோணமலை மாவட்டத்தில் அல்லைத்திட்டம், கந்தளாய் திட்டம், மொறவேவாத் திட்டம், மகா திவுல்வைத்திட்டம், பதவியாத்திட்டம் என வளர்ந்து வன்னி மாவட்டத்தின் வெலிஓயாவில் வந்துநிற்கின்றது.

தற்போது இடம்பெறும் ஆக்கிரமிப்புக்களை ஆக்கிரமிப்பு என்று சொல்வதை விட பச்சைச் சூறையாடல்கள் எனலாம். மன்னர் ஆட்சிக் காலத்தில் போரில் வெற்றியடைந்த மன்னர்கள் தோல்வி யடைந்த அரசுகளை பச்சையாக சூறையாடுவர். அத்தகைய ஒரு பச்சைச் சூறையாடலே தற்போது இடம்பெறுகின்றது. இதற்கு தேர்ந்தெடுத்த பிரதான பிரதேசங்கள் முல்லைத்தீவு மாவட்டமும், வவுனியா வடக்கும்தான்.

இதற்காக சிறீலங்காவின் அரச இயந்திரம் கூட்டுச் செயற்பாட்டில் இறங்கியுள்ளது. இச் செயற்பாட்டில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வன பரிபாலனசபை திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என எவையும் விதிவிலக்காக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சிறுநூல் கிவுல் ஓயாத்திட்டம், திருக்கோணேஸ்வரம் என்பவற்றிலுள்ள ஆக்கிரமிப்புக்களை விபரிக்கின்றது. கிவுல் ஓயாத்திட்டம் மகாவலி எல் வலயத் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாகும். மகாவலி எல் வலயத்திற்கு நீரைக் கொண்டு செல்வது என்ற பெயரிலேயே இது மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு கிவில் ஓயா என்பது வவுனியா மாவட்டத்தில் கிழக்குப்பகுதியில் உற்பத்தியாகி முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய்க்குச் செல்லும் மாஓயாவின் கிளை நதியாகும்.

1983ம் ஆண்டின் பின்னர் குடியேற்றப்பட்ட, இனி வரும் காலங்களில் குடியேற்றப்பட இருக்கின்ற 6000 சிங்கள விவசாயக் குடும்பங்களை மையப்படுத்தியே இத் திட்டம் உருவாக்கப் படுகின்றது. இத் திட்டம் ஏற்னவே அப் பிரதேசங்களில் வசிக்கும் தமிழ் மக்களை அவ் விடங்களில் இருந்து அகற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருக்கோணேஸ்வரம் தொல்லியலின் பெயரால் ஆக்கிரமிக்கப்படும் தமிழ் மக்களின் இன்னொரு தொன்மமாக உள்ளது. தொல்பொருட் திணைக்களம் பச்சையான ஆக்கிரமிப்பை அங்கு மேற்கொள்கின்றது. தொல்பொருட் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட அதிகாரி ஒரு குறுநில மன்னர் போலவே நடந்துகொள்கின்றார். ஆலய பரிபாலன சபையின் செயற்பாடுகளுக்கு தடைபோடுகின்றார்.

ஆர்.ராம் தமிழ் உலகம் நன்கறிந்த சிறந்த ஊடவியலாளர் ஆவார். அவரது இச் சிறு நூல் அண்மைக்கால ஆக்கிரமிப்புக்கள் பற்றிய புரிதலை வாசகர்களுக்கு வழங்கும் என எதிர்பார்க் கின்றோம்.

வாசகர்கள் எமது ஏனைய நூல்களுக்கு தந்த ஆதரவினைப் போல இதற்கும் தருமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம்.

நன்றி

**சமூக விஞ்ஞான ஆய்வு மையம்**
**28,செம்மணி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்துக்கள் நிறைந்த கிவுல் ஓயாத் திட்டம்

"வடக்கில் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும், திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஒதுக்கக் காடுகள் மற்றும் தொல்பொருளியல் பகுதிகளை அழித்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாது முன்னெடுக்கப்படவுள்ள இனம் சார்ந்த நீர்பாசனத்திட்டம்"

மகாவலி அதிகார சபையினால் வடமாகாணத்தின் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மகாவலி கங்கையின் நீரைக் கொண்டு செல்வதை இலக்காக வைத்து "மகாவலி-எல்" வலயத்திட்டம் முன்மொழியப்பட்டது.

இது, உட்கட்டமைப்பு, அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் வடமாகாணத்தில் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் உள்நோக்கத்தினைக் கொண்டது என்பதை வெளிப்படையாக உணரப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன.

போரின் பின்னரான சூழலில் "மகாவலி-எல்" வலய விஸ்தரிப்புக்களுக்கான முயற்சிகள் நேரடியாகவும், மறை முகமாகவும் முன்னெடுக்கப்பட்டபோதும், மக்கள் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக அந்த முயற்சிகள் முழுமையாக வெற்றியளித்திருக்கவில்லை.

காலநிலை மாற்றம் தொடர்பான அண்மைக்கால ஆய்வுகளின் பிரகாரம், "மகாவலி-எல்" வலயத்திற்கு நீரைக் கொண்டு செல்வதானது, "கல்லில் நார் உரிப்பதற்கு சமமானது" என்பது உணரப்பட்டதன் பின்னர் தற்போது புதிய மூலோபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதனடிப்படையில் தான், "கிவுல் ஓயா" நீர்பாசனத் திட்டம் முன்மொழியப்பட்டிருக்கின்றது. இது, "மகாவலி-எல்" வலயத்திற்கு நீரைக் கொண்டு செல்வதற்கானதொரு துணைத் திட்டம் தான்.

இந்த திட்டம் முன்னெடுக்கப்படுவதால், வடக்கின் எல்லையில் குடிப்பரம்பல் தீவிரமடையும், தொல்பொருளியல் பகுதிகள் மாயமாகும், வெள்ள அனர்த்தங்கள் ஏற்படும், சுற்றுச்சுழலின் பாதுகாப்பு மோசமாகும். குறிப்பாக, ஒதுக்கக் காடுகள் அழிக்கப்பட்டுவதோடு, யானை-மனித மோதல்கள் உட்பட விலங்குகள், பூச்சியினங்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

கிவுல் ஓயா திட்டம் பற்றிய சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பின் இணைப்புக்கள் மட்டுமே பொதுமக்களுக்கு பொதுப்படையாகக் காட்சிப்படுத்தப்பட்டு அனுமதி பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தனது கரிசனையை வெளியிட்டு அவதானங்களை எழுத்துமூலமாகப் பரிந்துரைத்திருக்கின்றது.

ஆனால், அந்தப் பரிந்துரைகள் உட்பட, பிரதேச வாசிகளின் கோரிக்கைகள் கூட கரிசனையில் கொள்ளப்பட்டு, கிவுல் ஓயா திட்டத் திற்கான உத்தேச முன்மொழிவுகள் மீளவும் மறுசீரமைக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆரம்பத்தில் திட்டமிட்ட வாறே அந்த நீர்ப்பாசனத் திட்டத்தினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டத்தின் விபரம்

வவுனியா மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் உற்பத்தியாகி, முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய்க்குச் செல்லும் "மா ஓயா"வின் பிரதான கிளை நதியே கிவுல் ஓயா.

இந்தக் கிவுல் ஓயாவை மையப்படுத்தி அணையைக் கட்டுவதன் மூலமாக, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விவசாயத்துக்கான நீர் மற்றும் குடிநீர் வசதியை ஏற்படுத்த முடியும் என்று மகாவலி அதிகார சபை முன்மொழிந்து இந்த திட்டத்தினை வடிவமைத்துள்ளது.

இத்திட்டத்தில், நீர்ப்பாசன உட்கட்மைப்பு அபிவிருத்திக்காக 6230மில்லியன் ரூபாவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக 832மில்லின் ரூபாவுமாக, மொத்தம் 7062மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

அத்துடன், குறித்த திட்டமானது, வலயம் "ஏ" - கிவுல் ஓயா நீர்த்தேக்கம் அணைக்கட்டு மற்றும் வெள்ளப் பெருக்குப் பகுதி, வலயம் "பி" - விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள், வலயம் "சி" – கிவுல் ஓயா திட்டத்தின் கீழான குடியேற்ற பகுதிகள், வலயம் "டி" - சிறு தாங்கிகள் மற்றும் அவற்றை அண்மித்த குடியிருப்புகள், வலயம் "ஈ" -முன்மொழியப்பட்ட யானை வழித்தடம் என்று ஐந்து கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினால், ஏற்கனவே குடியேற்றப்பட்டுள்ள 4,372குடும்பங்கள், மற்றும் புதிதாக குடியேற்றப்படவுள்ள 1626குடும்பங்களென மொத்தமாக 6000விவசாயக் குடும்பங்கள் நேரடிப்பயனாளிகளாகவும், 50ஆயிரம் பேர் குடிநீரைப் பெறும் பயனாளிகளாகவும் இருப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, இந்தத் திட்டத்தின் ஊடான பயனாளிகள் அனைவரும் 1983இன் பின்னர் குடியேற்றப்பட்ட "சிங்கள" விவசாயிகளாக இருக்கின்றார்கள் என்றும் அவர்களில் 0.86சதவீதத்தினர் மட்டுமே ரோமன் கத்தோலிக்கர்கள் என்றும் ஏனையவர்கள் பௌத்தர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குடியேற்றப்பட்டவர்களுக்கு சொந்தமாக விவசாய நிலங்கள் காணப்படாமையாலும், நீர்ப்பாசன வசதி காணப்படாமையாலும், வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதோடு, அவர்களுக்கு கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்ற தேவைப்பாடுகளும் அவசியமாக உள்ளன என்றும் உத்தேச திட்டத்தின் இலக்கில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## தீவிரமடையும் குடிப்பரம்பல்



முன்னெடுக்கப்படும் கிவுல் ஓயா நீர்பாசனத்திட்டத்திற்கு சமாந்தரமாகத்தான் வவுனியாவிலிருந்து, முல்லைத்தீவுக்கு ஆரம்பகாலங்களில் தமிழ் மக்கள் கால் நடையாக பயணித்திருக் கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, கொக்குளாயிலிருந்து, கருவாடு உள்ளிட்ட கடல்சார் பொருட்களை பொதிகளாக்கி வெடிவைத்தகல்லு, மருதோடை, காஞ்சிரமோட்டை பகுதிகளுக்கு எருமை மாடுகளில் ஏற்றி விநியோகித்ததோடு, அம்மக்கள் தமக்கு தேவையான மிளகாய் உள்ளிட்ட தானியங்களையும் மீளப் பெற்றுச்சென்ற நினைவுகள் தற்போதும் உள்ளன.

இவ்வாறிருக்கையில் தான் கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்ட முன்மொழிவின் அடிப்படையில், வடக்கில் வலிந்து குடியேற்றப்பட்ட சிங்கள பௌத்தர்களை மட்டுமே இத்திட்டம் மையமாகக் கொண்டது என்பதோடு, குடியேற்றப்பட்ட ஒரு குடும்பத்திற்கு தலா 1.17 மில்லியன் ரூபா நீர்வழங்கல் வசதிக்காக மட்டும் செலவிடப் படவுள்ளமையும் வெளிப்பட்டுள்ளது.

குடியேற்றப்பட்ட சிங்கள, பௌத்தர்களின் நீர்த்தேவைக்காக மட்டும் இவ்வளவு தொகை செலவிடப்படுகின்றதென்றால், அவர்களுக்கான இருப்பிடங்கள் உள்ளிட்ட ஏனைய அடிப்படை வசதிகளுக்காக எவ்வளவு செலவிடப்பட்டிருக்கும் என்பது தொடர்பிலும் ஆழமான கரிசனை கொள்ளவேண்டிய தேவை இங்கு இயல்பாகவே எழுகின்றது.





அதுமட்டுமின்றி, இந்நீர்ப்பாசனத் திட்டம் முற்றுப் பெறுகின்றபோது ஒதுக்கக் காடுகள் மேலும் அழிக்கப்பட்டு மேலதிகமான குடியேற்றங்கள் இடம்பெறுகின்றமைக்கான ஏதுநிலைகளும் இல்லாமலில்லை. அவ்விதமான நிலைமை ஏற்படுகின்றபோது வவுனியா மற்றும் முல்லைத்தீவின் குடிப்பரம்பலில் சடுதியான மாற்றங்கள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாயமாகும் நிலையில் தொல்பொருள் பகுதிகள்**



இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களத்தின் முதற்கடமையாக இருப்பது, நாட்டின் தொல்பொருள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கான பிரதான ஒழுங்குமுறை அமைப்பாக உச்சபட்சமான அளவில் செயற்படுவதாகும்.

வடக்கிலும், கிழக்கிலும், தமிழர்களினது பூர்வீகமான இடங்கள் தொல்பொருளியல் திணைக்களத்தின் பெயரால் பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப் படுகின்ற தருணங்களில் மேலே கூறிய தமக்குள்ள முதற் கடமையின் அடிப்படையில் தான் செயற்படுகின்றோம் என்று தொல் பொருளியல் திணைக்களம் வாதம் செய்தது. தனது செயற்பாடு களையும் நியாயப்படுத்தியது. தற்போதும் நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

யாழ்.நிலாவரை, வவுனியா வெடுக்குநாறி, முல்லைத்தீவு குருந்தூர்மலை, திருகோணமலை கன்னியா பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு மயிலத்தமடு,மாதவனை உள்ளிட்ட பகுதிகளை மீட்கும் போராட்டங்களின் போதும் பேச்சுவார்த்தை களின் போதும் தொல்பொருளியல் திணைக்களத்தின் பிரதிபலிப் புக்கள் அதற்கு மிகச்சிறந்த உதாரணங்களாகவுள்ளன.

அவ்வாறிருக்கையில், கிவுல் ஓயா நீர்பாசனத் திட்டம் முழுமைப்படுத்தப்படும் பட்சத்தில் அப்பகுதியில் உள்ள வரலாற்று இடங்கள், இந்து, பௌத்த மடாலய தலங்கள், மட்பாண்டங்கள் மற்றும் தலங்கள், பிற தொல்பொருள் இடங்கள் உள்ளிட்டவைக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படவுள்ளன.

குறிப்பாக, வலயம்-"ஏ"இல் 9இடங்களும், வலயம்-"பி"இல் 17இடங்களும், வலயம்-"சி"இல் 19இடங்களும், வலயம்-"டி"இல் 2இடங்களுமாக மொத்தம் 47 தொல்பொருளியல் இடங்கள் முறையாக பராமரிக்க முடியாதும் சில நீரினுள் மூழ்கி அடையாளமே தெரியாது போவதற்கான சாத்தியங்களும் அதிகமுள்ளன.

பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் ஏற்கனவே தொல்பொருட் களைக் கொண்டுள்ளவையென உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கிவுல் ஓயா திட்டத்திற்கு தொல்பொருளியல் திணைக்களம் எவ்வாறு பச்சைக்கொடி காண்பித்தது? கூடவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிவுல் ஓயா திட்டத்திற்காக தொல்பொருளியல் திணைக்களம், தனது முதற்கடமையிலிருந்தே விலகி நிற்கின்றதா?

தமிழர்களின் பூர்வீகத்தை பறைசாற்றும் வகையில் வன்னி இராச்சியத்துடன் தொடர்புடைய தொன்மங்களே அதிகளவில் இப்பகுதியில் காணப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக இப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டிருக்கும் தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவ்வாறாயின், தமிழர்கள் சார்ந்த தொன்ம விடயங்களை பொருட்டாக கொள்ளாது தொல்பொருளியல் திணைக்களம் இனரீதியான பாகுபாட்டுடன் செயற்பாடுகளை முன்னெடுகின்றது என்ற சந்தேகம் எழுவதை இவ்விடத்தில் தவிர்க்க முடியாதுள்ளது.

## வெள்ளத்தால் மூழ்கப்போகும் கிராமங்களும் குளங்களும்

கிவுல் ஓயா திட்டம் முற்றுப்பெறும் பட்சத்தில், காட்டுப் பூவரங்குளம், வெடிவைத்தகல்லு, மருதோடை, காஞ்சிரமோட்டை, கூழாங்குளம் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. குறிப்பாக, காட்டுப்பூவரங்குளத்தில் 430ஏக்கர்களும், வெடிவைத்தகல்லில் 475 ஏக்கர்களும் வெள்ள அனர்த்த அபாயத்தில் உள்ளன.

இந்தக் கிராமங்களில் இன்னமும் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் நிறைவேறாத நிலைமை நீடித்துக் கொண்டிருக்கையில் தான் இவ்வறான வெள்ள அனர்த்த அபாய நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

இக்கிராமங்களில் பூர்வீகமாக வாழ்ந்தவர்களுக்குச் சொந்தமான உறுதிக்காணிகள் மற்றும் வாழ்வாதார நிலங்கள் காணப்படுகின்றபோதும் அவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் இன்னமும் தாமதங்கள் நீடித்துக்கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிடவும், இராமன்குளம், வேலன்குளம் உள்ளிட்ட சிறுகுங்கள் மற்றும் நீரேந்துப்பகுதிகள் இத்திட்டத்தின் ஊடாக மூழ்கும் நிலையே உருவாகியுள்ளமை குறிப்பிடதக்கதாகின்றது.

**கருத்திற்கொள்ளப்படாத சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

வவுனியா பெரியகட்டிக்குளம் பகுதியில் காணப்பட்ட ஒதுக்கக்காடுகள் அழிக்கப்பட்டே கிவுல் ஓயா திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன் கொக்குத்தொடுவாயில் உள்ள "கிரிபன் வெவ" என்று பெயர் மாற்றப்பட்டுள்ள ஆமையன் குளத்திற்கு நீரை நகர்த்துகின்றபோது 2500ஹெக்டெயர் காடுகள் அழிந்துவிடும் என்று சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை அண்மித்த புதிய குடியேற்றங்கள் காரணமாக, 1500ஹெக்டெயர் அளவிலான வாழ்விடத்தினை வனஜீவராசிகள் இழப்பதால் மனிதன்-யானை மற்றும் ஏனைய வன ஜீவராசிகளுக்கிடையிலான மோதல் தீவிரமடையும் என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் கவலை வெளியிட்டுள்ள தாகவும் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால், மேம்படுத்தப்படுத்தப்படவுள்ள விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்காக மின்சார வேலிகள் அமைக்கப்படுமாக இருந்தால் காட்டுயானைகள் மற்றும் ஏனைய வன ஜீவராசிகளின் நடமாட்டம் கேள்விகுறியாகும் சூழல் தோன்றுவதால் அவற்றின் உயிர்வாழ்வு சம்பந்தமான பிரச்சினைகள் உருவாகுகின்றன.

காட்டுயானைகள் உள்ளிட்டவை, புதிய வழித்தடங்களை நாடினால் மின்சார வேலிகளை மேலும் 50கிலோமீற்றருக்கு அதிகரிக்கும் நிலைமைகள் ஏற்படுவதோடு, அதற்காக, மேலதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி ஒதுக்கீடும் தேவையாகும் என்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைகளம் கரிசனை வெளியிட்டுள்ளது.

மனிதன்-யானை மற்றும் ஏனைய ஜீவிராசிகளுக்கு இடையிலான மோதலைத் தடுப்பதற்காக நீர்ப்பாசனத் திட்டத்தின் அணைக்கு கீழே வழித்தடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சாரவேலி தடுப்புக்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை பூரணப்படுத்துவதற்கு முன்னதாக விவசாய நிலங்களுக்கு பிரவேசிக்கும் யானைகள் உள்ளிட்ட வன ஜீவராசிகளை தடுப்பதற்கான எவ்விதமான திட்டங்களும் கூறப்படவில்லை.

எதிர்காலத்தில், ஒதுக்காடுகளை அழிக்கும் நிலைமைகள் மேலும் தீவிரமடைந்தால் நீண்டகாலத்தில் மழைவீழ்ச்சி குறைவடைவதற்கான நிலைமைகள் தோற்றம் பெறலாம் என்றும், திட்டப் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த 88 தாவர இனங்களில் இரண்டு தேசிய அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளானவை என்றும் முக்கியமான ஏழு தவர இனங்கள் உள்ளன என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன், பதிவுசெய்யப்பட்ட 214 விலங்கு இனங்களில், 14 உள்ளூரைச் சேர்ந்தவையாக இருப்பதோடு நான்கு இனங்கள் உலக அளவில் ஆபத்துக்குள்ளானவையாகவும் எட்டு இனங்கள் தேசிய அளவில் அழிந்து வருபவையாகவும் உள்ளன. பறவைகளில், 10 புலம்பெயர்ந்த இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆகவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது இத்திட்டத்தின் நேர்மறையான முடிவுகளை விடவும் எதிர்மறையான தாக்கங்களே அதிகமாக இருக்கின்றன.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், பல ஆபத்துக்கள் நிறைந்திருக்கின்ற கிவுல் ஓயா திட்டமானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படைத் தன்மையற்ற வகையில், களஆய்வு அறிக்கைகள் தயார் படுத்தப்பட்டு, வரையறைகளைக் கடந்து அதிகாரத்தின் பால் அனுமதிகள் வழங்கப்பட்டு உள்நாட்டு நிதி ஒதுக்கீட்டிலேயே திட்டத்தினை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான தயார்படுத்தல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதனடிப்படையில் கிவுல் ஓயா திட்டத்தின் பின்னால் உள்ள நோக்கையும், இலக்கையும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகின்றதல்லவா?

**கிவுல் ஓயா திட்டத்திற்கான உத்தேச செலவுகள்**

| | விபரம் | தொகை (மில்லியன்) |
|---|---|---|
| 01 | பிரதான அணை | 3,240 |
| 02 | நீர் கசிவுப்பாதை | 875 |
| 03 | கால்வாய் மற்றும் மதகுகள் | 70 |
| 04 | வீதிகள் | 50 |
| 05 | பிரதான கால்வாய் மற்றும் இரண்டாம் நிலை கால்வாய்கள் | 1,480 |
| 06 | கால்நடைகள் மேம்பாட்டுத்திட்டம் | 185 |
| 07 | பொதுவானவை | 330 |
| 08 | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | 832 |
| | மொத்தம் | 7,062 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திட்டப்பகுதியில் தற்போதைய நிலப்பயன்பாடு**

| | விபரம் | தொகை (மில்லியன்) |
|---|---|---|
| 01 | குடியேற்றம் | 1,467 |
| 02 | வயல்கள் | 995 |
| 03 | தெங்கு நிலங்கள் | 10 |
| 04 | தாங்கிகள் மற்றும் நீர்நிலைகள் | 875 |
| 05 | அடர்ந்த காடுகள் | 1,181 |
| 06 | திறந்த காடுகள் | 947 |
| 07 | குறுங் காடுகள் | 1,098 |
| 08 | வெற்று நிலங்கள் | 2,569 |
| 09 | ஏனையவை | 53 |
| | மொத்தம் | 9,195 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்

"தொல்பொருளியலின் பெயரால் ஆக்கிரமிக்கப்படும் தமிழரின் மற்றுமொரு தொன்மம்"

அன்று ஆகஸ்ட் 3ஆம் திகதி, கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகத்திற்கு அழைக்கப்படுகின்றனர் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பரிபாலனசபைத் தலைவர் திலகரட்ணம் துஷ்யந்தன் மற்றும் செயலாளர் பரஞ்சோதிப்பிள்ளை பரமேஸ்வரன் "ஆலயத்தினை அண்மித்துள்ள கீழ் பகுதி சமதரையில் 58வியாபார நிலையங்களை நிரந்தரமாக அமைக்கவுள்ளோம். அவற்றுக்கு மின்சார மற்றும் நீர் வழங்கல் வசதிகளையும் வழங்கவுள்ளோம்" என்ற தகவலை பரிமாற்றுகிறார் தொல்பொருளியல் திணைக்களத்தின் திருமலை மாவட்ட அதிகாரி.

"அவ்வாறான தீர்மானமொன்று எங்குமே எடுக்கப்படவே இல்லையே"என்று பதிலுரைகின்றனர் ஆலயத்தின் பரிபாலனசபைத் தலைவர் மற்றும் செயலாளர்.

அச்சமயத்தில், "நாங்கள் உங்களிடத்தில் அனுமதி கோரவில்லை. அவ்வாறு கோர வேண்டிய அவசியமும் இல்லை. சம்பிரதாயபூர்வமாக உங்களுக்கு தகவலொன்றை பரிமாற்று கின்றோம்"என்று பதிலளிக்கின்றார் தொல்பொருளியல் திணைக் களத்தின் அந்த அதிகாரி.

திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பரிபாலனசபைத் தலைவர் திலகரட்ணம் துஷ்யந்தன், ஒரு சட்டத்தரணி. ஆதலால் அவர், "தொல்பொருளியல் சட்டத்தின் சரத்து 20இன் பிரகாரம், அடையாளப்படுத்தப்படும் பகுதியை பாதுகாக்க வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளதே தவிரவும், அங்கு நிர்மாணங்களைச் செய்ய முடியாதல்லவா" என்று வாதிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரது வாதம் வெற்றிபெறவில்லை. ஏனென்றால், பிராந்திய அதிகாரி வெறுமனே "அம்பு" மட்டும் தான். "தொல்பொருளியலின் பெயரால் தமிழின தொன்மைகளை ஆக்கிரமிக்கும் தென்னிலங்கையின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்" என்ற வில்லால் எய்யப்பட்ட அம்பேமாவட்ட அதிகாரி. அதனால் தர்க்கம் செய்வதால் பயனில்லை.

**தொல்பொருள் பிரகடனம்**

தமிழர் தேசத்தின் தலைநகரான திருகோணமலையில் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரால் பதிகம்பாடப்பெற்ற திருத்தலமாகவும், பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் திகழ்வது திருக்கோணேஸ்வரம். இவ்வாலயத்தின் வரலாற்ற சிறப்பம்சங்களின் பட்டியல் நெடியது.

அத்துணை பெருமைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்த ஆலயம் 1981ஆம் ஆண்டு மிகப்பெறு மதியான தொல்பொருளியல் பகுதியாக அடையாளம் காணப்பட்டு வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து, இந்த ஆலயத்தில் சிறுகல்லொன்றை அகற்றுவது கூட சட்டத்திற்கு முரணான விடயமாகும். இதனை, நன்குணர்ந்த பரிபாலன சபையினர் அதன்பிரகாரமே ஆலயத்தை நிருவகித்தும் வந்துகொண்டிருக்கின்றனர்.

**அளவிடை**

அவ்வாறிருக்க, திருகோணேஸ்வர ஆலயம் இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டது. அதில் முதலாவது பிரதான ஆலயம் அமைந்திருக்கும் பகுதியாகும். இந்தப் பகுதி 18ஏக்கர்கள் ஒரு ரூட் 29பேர்ச்சஸ் அளவு நிலப்பரப்பைக் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது, பாவநாசம் தீர்த்தத்தை அண்மித்துள்ள 3ஏக்கர் 2ரூட் ஒருபேர்ச் அளவு நிலப்பரப்பைக் கொண்டதாகும். இதனைவிடவும், பிரதான ஆலயத்தின் கீழ்பகுதியில் உள்ள கோட்டை வாசலில் 26பேர்ச்ஸ் நிலப்பரப்பு ஆலயத்திற்குச் சொந்தமானதாகவே உள்ளது.

ஆலயத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பு பற்றிய விபரங்கள், 1971ஆம் ஆண்டு, அப்போதைய பரிபாலனத் தலைவர் எம்.கே.செல்வராசாவின் பெயரில் காணப்படும் "உரித்து வரைபடத்தில்" மிகத்தெளிவாக கூறப்பட்டுள்ளது.

**"நிலமே"யும் கடைகளும்**

இந்நிலையில், 2008ஆம் ஆண்டு ஐ.தே.க.விலிருந்து வெளியேறிய சுசந்த புஞ்சிநிலமே சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்ளவும், அவர் தேர்தலில் களமிறங்குவதற்கு திருகோணமலை தொகுதி வழங்கப்படுகின்றது.

இரத்தினபுரியில் இருந்து ஆதரவாளர்களுடன் வந்து திருமலை கச்சேரிக்கு அருகில் தங்கியிருந்த காலத்தில், அவரது ஆதரவுக்குழாத்தில் இருந்த பெரும்பான்மை சமூகத்தவர்களால் ஆலய வளாகத்தினுள் மூன்று வியாபார நிலையங்கள் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது, நகரசபையிடத்தில் எவ்விதமான அனுமதியையும் குறித்த வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் பெற்றிருக்கவில்லை. அப்போதைய ஆலய நிருவாகத்தினரும், அந்த விடயத்தில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. "வயிற்றுப்பிழைப்புக்காகத்தானே" என்ற மனோநிலையில் பொருட்டாக அவர்கள் கொண்டிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்விளைவு, அவை 58 வியாபார நிலையங்களாக விரிவடைந்து நிற்கின்றது. அதுமட்டுமன்றி அத்தனை வியாபார நிலையங்களினதும் உரிமையாளர்கள் பெரும்பான்மை சமூகத்தவர்கள்.

**ஆரம்பித்த தலையிடி**

வியாபர நிலையத்தை அடியொற்றி ஆலப்பகுதிக்குள் பெரும்பான்மை சமூகத்தினரின் அதீதமான பிரசன்னம் ஏற்படவும், யதார்த்தத்தை உணர்ந்த பரிபாலன சபையினர், கடைகளை அகற்றுவதற்கு காய்களை நகர்த்தினார்கள். அதனால், வியாபார நிலைய உரிமையாளர்கள் மல்லுக்கட்ட ஆரம்பித்தனர்.

பின்னர் இவ்விடயம் 2018இல் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அப்போது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் எதிர்கட்சித்தலைராக இருந்த சம்பந்தனும் அவருடன் நல்லுறவில் இருக்கும் சுசந்த புஞ்சிநிலமேயும் பிரசன்னமாகியிருந்தனர்.

அவர்களின் முன்னிலையில் விடயம் ஆராயப்பட்டு, குறித்த வியாபரா நிலையங்களை ஆலயத்தின் முகப்பில் உள்ள "கிளிப் கொட்டேஜ்" பகுதிக்கு இடமாற்றுவதெனவும், அங்கு நகர சபையினரால் வியாபார நிலையங்களுக்கான நிர்மாணம் செய்யப்பட்டு கையளிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**துரத்திய துரதிஷ்டம்**

ஆனால், குறித்த தீர்மானம் நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டன. முதலில் நகரசபையிடத்தில் போதிய நிதி காணப்பட்டிருக்கவில்லை. பின்னர், ஆலயம் அதற்கான நிதியை நகரசபைக்கு வழங்குவதற்கு முன்வந்து நடவடிக்கைகள் எடுக்கப் பட்டபோது, மத்திய அரசில் ஆட்சிக் குளறுபடிகள் ஏற்பட்டுவிட்டன. பின்னர் கொரோனா நிலைமைகள் என்று காலம் கடந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைதூக்கிய நெருக்கடி**

வடக்கு, கிழக்கில் அபிவிருத்திக்கான உதவிகளை மேற்கொள்வதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடத்தில் "இந்தியா" திட்ட வரைவுகளை அண்மையில் கோரியிருந்தது.

அதற்கு அமைவாக, திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தனால் வழங்கப்பட்ட வரைவில், "திருக்கோணஸ்வரத்துக்கான இராஜகோபுர முன்மொழிவும்" செய்யப்பட்டிருந்தது.

கோணஸ்வரத்திற்கான இராஜகோபுரத்தினை அமைப்பதற்கு இந்தியத் தரப்பில் சாதகமான சமிக்ஞை வெளிப் படுத்தப்பட்ட நிலையில் அண்மையில் சிற்பாசாரிகள் ஆலயத் திற்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

சிற்பாசாரிகளின் விஜயம், ஆலயப்பகுதியில் வியாபார நிலையங்களை கொண்டிருப்பவர்களுக்கு கிலியை ஏற்படுத்தியுள்ளது. தமது, வியாபார நிலையங்கள் அகற்றப்படப் போகின்றன என்பதை குறிப்பால் உணர்ந்துள்ளனர்.

அதன்பின்னரே, ஆலயத்தின் தலைவரும், செயலாளரும், தொல்பொருளியல் திணைக்கள மாவட்ட அதிகாரியால் அழைக்கப்பட்டிருந்தனர். இதன்மூலம் தொல்பொருளியல் திணைக்களத்தின் வகிபாகம் என்னவென்பது வெளிச்சமாகின்றது.

**முரண்நகை**

அண்மைய காலங்களில் தேரோடும் வீதி விஸ்தரிப்பதற்கும் ஆலயத்தின் உட்பகுதியில் உள்ள அழிந்துபோன அன்னதான மடத்தினை மீளமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ஆனால் தொல்பொருளியில் திணைக்களம் அனுமதிகளை வழங்கவில்லை. ஆலமரக்கிளையொன்று அகற்றப்பட்டதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய பரிபாலன சபையினருக்கு "தொன்மங்களை சீர்குலைத்தால் சட்டநடவடிக்கை" என்று இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், தொன்மங்களை உடைய ஆலயப்பகுதியில் வியாபார நிலையங்களை நிரந்தமாக அமைத்துக்கொடுப்பதற்கும் அப்பணியை தானே முன்னெடுப்பதற்கும் தொல்பொருளியல் திணைக்களம் எவ்வாறு இணங்கியது. அச்செயற்பாட்டை அத்திணைக்களம் எந்த சட்ட அதிகாரத்தின் கீழ் மேற்கொள்கின்றது என்பது பிரதான கேள்வியாகிறது.

**பூச்சியநிலை**

அண்மைக்காலமாகவே, கோணேஸ்வரர் ஆலயத்தின் திருப்பணிகள் முன்னெடுப்பதற்கு தொல்பொருளியல் திணைகளம் முட்டுக்கட்ட போட்டுவருகின்றது. இந்த நிலையில், இராஜகோபுர நிர்மாணம் சாத்தியமாகுமா என்ற ஐயப்பாடுகளும் அதிகரித் துள்ளன.

திருகோணேஸ்வர ஆலய நிலைமைகள் குறித்து கரிசனை கொள்ளுமாறு, சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாச குருக்கள், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவரும் செஞ்சொற்செல்வருமான கலாநிதி.ஆறு.திருமுருகன், ஆகியோர் பிரதமர் மற்றும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடத்தில் கோரியுள்ளனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பாராளுமன்றிலும், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம் பொது வெளியிலும் நிலைமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் எந்தவிரதமான பிரதிபலிப்புக்களும் இதுவரையில் கிடைக்க வில்லை. பூச்ச நிலைமையே நீடிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராபத்தான திட்டங்கள்**

திருக்கோணேஸ்வர ஆலயத்தில் வியாபார நிலையங்களை நிர்மாணத்தல் என்ற விடயம் தான் தற்போதைக்கு வெளிப்பட்டாலும், இதன் பின்னால் பேராபத்தான திட்டங்கள் மறைந்துள்ளன.

அதாவது, கோணேஸ்வர ஆலத்திற்கு கீழ்ப்பகுதியில் சங்கமித்த விகாரை காணப்படுகின்றது. இது வரலாற்று முக்கியத்துவமானதாக கூறப்படுகின்றது. ஆனால் கோணேஸ்வரர் ஆலயத்தினை மையப்படுத்தியே வீதி நிர்மாணங்கள் செய்யப் பட்டிருப்பதால் குறித்த விகாரை பிரசித்தமடையாது காணப் படுகின்றது என்ற சிந்தனை விகாராதிபதி உள்ளிட்டவர்களுக்கு உண்டு.

எனவே, கோட்டைவாசல் அருகிலிருக்கும் இராணுவ முகாம் ஊடாக சங்கமித்த விகாரைக்கு செல்கின்ற போக்குவரத்து ஏற்பாடுகளை தவிர்த்து, விகாரையை நேரடியாக மையப்படுத்தும் வீதியை பிரதானப்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.


குறித்த வீதி பிரதானப்படுத்தப்பட்டால், கோட்டை வாசல் பாதுகாப்பு காரணங்களை காண்பித்து நிரந்தரமாக மூடப்படும். அதன்பின்னர் சங்கமித்த விகாரைக்கான வீதியே பிரதானப் படுத்தப்படும். பின்னர், தொல்பொருளியல் திணைக்களத்தால் முன்மொழியப்பட்டுள்ள வியாபார நிலையங்கள் அமைக்கப்படும் பகுதியை குறித்த வீதியூடாக பயணித்து, படிகள் மூலமாகவே ஆலயத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அவ்வாறாயின், சங்கமிதத விகாரையைக் கடந்தே கோணேஸ்வரை அடையவது நியதியாகிவிடும். இதுதான் திட்டத்தின் முதலாவது அங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இரண்டாவது, சங்கமித்த விகாரைக்கான குறித்த வீதியை விஸ்தரித்து கடற்கரை வீதியுடன் இணைப்பதாகும். இதன்மூலமாக, ஏற்கனவே, மத்தறை, காலி மற்றும் தங்கல்ல ஆகிய பகுதியில் இருந்து வருகை தந்து "கொரியாவத்த" என்னும் பெயரில் உருவாகியுள்ள சிங்கள மீனவக்கிராமத்துடன் தொடர்புபடுத்த முடியும். அத்துடன், அக்கிராமத்துக்கு அருகில் உள்ள ஏனைய வெற்றுநிலங்களில், கோணேஸ்வரர் ஆலய வியாபார நிலையத்தை சேர்ந்தவர்கள் மற்றும் இதர தரப்பினர்களுக்கான குடியேற்றங்களையும் தாரளமாகவே மேற்கொள்ள முடியும்.


ஆக, தமிழரின் தொன்மம் நிறைந்த பகுதியில் வாழ்வாதரத்தின் பெயரால் வியாபார நிலையங்களை அமைத்து, ஆக்கிரமிப்புக்கான வாழிடங்களை உருவாக்குவாக்குவதற்கு, தொல்பொருளியல் திணைக்களம் தூபமிடுகின்றது என்பது தான் அப்பட்டமான உண்மை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த நூல்கள்

1. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
2. இந்தியாவும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
3. நினைவு கூர்தல் - 2017 - நிலாந்தன்
4. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்" சி.அ.யோதிலிங்கம்
5. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும். சி.அ.யோதிலிங்கம்
6. இந்து சமுத்திரமும் சீனாவும். - கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்
7. வட - கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
8. இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள். - சி.அ.யோதிலிங்கம்
9. ஈழத்தமிழர் அரசியல் வரலாறு - 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்க குறிப்புக்கள்) பாகம் - 01 - சி.அ.யோதிலிங்கம்
10. வட கொரியாவும் சர்வதேச அரசியலும் கலாநிதி. கே.ரீ. கணேசலிங்கம்
11. இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
12. மலையக மக்களின் அடையாளம் எது? - சி.அ.யோதிலிங்கம்
13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள் - சி.அ.யோதிலிங்கம்
14. 2009 இற்குப் பின்னரான தமிழ் இராஜதந்திரம் - நிலாந்தன்
15. தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும் சி.அ.யோதிலிங்கம்
16. கன்னியாவைப் பாதுகாப்போம்' - சி.த. காண்டீபன், சி.கமலகாந்தன், சி.அ.யோதிலிங்கம்
17. இளைய தலைமுறைகளுக்கு ஞாபகங்களை கடத்துங்கள் - நிலாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும் – சி. அ. யோதிலிங்கம்

19. புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை – சி. அ. யோதிலிங்கம்

20. தமிழ்மொழி புறக்கணிப்புக்கு வயது – 64 – சி. அ. யோதிலிங்கம்

21. கிழக்கு! தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்கிறதா?

–சி. அ. யோதிலிங்கம்

22. இனப்பிரச்சனை என்றால் என்ன? – சி. அ. யோதிலிங்கம்

23. தமிழகமும் ஈழத்தமிழரும் – சி. அ. யோதிலிங்கம்

24. இரண்டாவது குடியரசு யாப்பும் (1978) தமிழ் மக்களும்

–சி. அ. யோதிலிங்கம்

25. தமிழ் தேசிய அரசியலும் புலம்பெயர் மக்களும் –சி. அ. யோதிலிங்கம்

26. தமிழர் தாயகத்தின் கூட்டிருப்பைச் சிதைக்கும் திருகோணமலைக் குடியேற்றங்கள். –சி. அ. யோதிலிங்கம்

27. தமிழ்த்தேசிய அரசியல் பேரியக்கமே! இன்று அவசியம்.

–சி. அ. யோதிலிங்கம்

**விலை – ரூபா 50.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org